# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 10 | புவியியல்<br>பெயர் / சுட்டெண் : .................................................. | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

✷ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. வளிமண்டலத்தில் உள்ள பிரதான வாயுக்களில் ஒன்றான ஆகனின் அளவு
    1) 0.03%  2) 20.95%  3) 0.93%  4) 0.00006%

02. மிகப்பெரிய தொகுதியாகக் கருதப்படுகின்ற புவியின் மொத்தப் பரப்பளவு
    1) 810 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள்  2) 510 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள்
    3) 390 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள்  4) 49 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள்

03. படை மண்டலத்தின் மேல் எல்லையானது
    1) கடல் மட்டத்திலிருந்து 48-50 கி.மீ வரை பரந்துள்ளது
    2) கடல் மட்டத்திலிருந்து 15-32 கி.மீ வரை பரந்துள்ளது
    3) கடல் மட்டத்திலிருந்து 9-16 கி.மீ வரை பரந்துள்ளது
    4) கடல் மட்டத்திலிருந்து 8-12 கி.மீ வரை பரந்துள்ளது

04. சமுத்திரப் பகுதிகளில் புவி ஓட்டின் தடிப்பு
    1) 10 கி. மீற்றர் வரையான ஆழத்தில் காணப்படுகின்றது
    2) 5 கி. மீற்றர் வரையான ஆழத்தில் காணப்படுகின்றது
    3) 7 கி. மீற்றர் வரையான ஆழத்தில் காணப்படுகின்றது
    4) 35 கி. மீற்றர் வரையான ஆழத்தில் காணப்படுகின்றது

Education கல்வி அධ්‍යාපන

05. கண்ட ஓட்டில் அதிகமாகக் காணப்படும் கனிமம்
    1) அலுமினியம், நிக்கல்  2) சிலிக்கா, அலுமினியம்
    3) இரும்பு, நிக்கல்  4) மக்னீசியம், சிலிக்கா

06. மாறன் மண்டலத்திலிருந்து உயரம் அதிகரித்துச் செல்லச் செல்ல வெப்பநிலையானது
    1) 1000 மீற்றருக்கு $6.4^0C$ வரை குறைவடைந்து செல்லும்.
    2) 1000 மீற்றருக்கு $6.4^0C$ வரை அதிகரித்துச் செல்கிறது.
    3) 100 மீற்றருக்கு $6.4^0C$ வரை குறைவடைகின்றது.
    4) 100 மீற்றருக்கு $6.4^0C$ வரை அதிகரிக்கிறது.

07. புவி மேற்பரப்பில் நீர்க்கோளத்தில் சமுத்திர நீரின் விகிதம்
    1) 71%  2) 97.5%  3) 2.78%  4) 29%

08. சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவுகள் அழைக்கப்படும் பெயர்
    1) மேட்டுநிலங்கள்  2) சமவெளிகள்  3) கண்டங்கள்  4) முகடுகள்

09. பிரதான புவித்தகடுகளுள் சமுத்திரங்களுடாகக் காணப்படுவது
    1) அந்தாட்டிக்தகடு  2) அமெரிக்கத்தகடு  3) ஆபிரிக்கத்தகடு  4) பசுபிக்தகடு

10. புவியின் மேற்பரப்பிலிருந்து ஆரம்பமாகும் வளிமண்டலப் படை
    1) மாறன்மண்டலம்  2) படைமண்டலம்  3) இடைமண்டலம்  4) வெப்பமண்டலம்



kalvi.lk

11. ஆசியாவிற்கு வெளியே நெற்செய்கை நடைபெறும் நாடுகளில் ஒன்று
1) தாய்லாந்து 2) மடகஸ்கார் 3) மியன்மார் 4) ஜப்பான்

12. அதிக விளைச்சலைத் தரும் புதிய கோதுமை இனங்களில் ஒன்று
1) நெரின் 10 2) IR8 3) BG300 4) LD356

13. நெற்பயிர்ச்செய்கைக்குத் தேவையான வெப்பநிலையின் அளவு
1) $21^0C - 35^0C$ இடையிலான சராசரி வெப்பநிலை
2) $15^0C - 30^0C$ இடையிலான சராசரி வெப்பநிலை
3) $18^0C - 28^0C$ இடையிலான சராசரி வெப்பநிலை
4) $27^0C - 32^0C$ இடையிலான சராசரி வெப்பநிலை

14. இலங்கையின் சிறுதென்னை முக்கோண வலயத்தினுள் அடங்கும் பகுதிகள் முறையே
1) குருணாகல், சிலாபம், கொழும்பு 2) குருணாகல், புத்தளம், கொழும்பு
3) ரன்ன, மித்தெனிய, தங்கல்ல 4) புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம்

15. இலங்யையில் முதன்முதலில் இறப்பர் மரம் நடப்பட்ட ஆண்டு
1) 1890 2) 1827 3) 1990 4) 1833

**✷ 16-20 வரையான வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதி அதனைப் பூரணப்படுத்துக.**

16. கண்ட ஓடு ..................................... பாறையைக் கொண்டுள்ளது.

17. புவியோட்டுக்கும், மையத்துக்கும் இடையில் அமைந்துள்ள படை ..................................... ஆகும்.

18. புவித்தகடுகள் மூடிப்பகுதியில் செயற்படுகின்ற ..................................... விளைவினால் நகர்கின்றன.

19. மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர்நிலம் ..................................... எனப்படும்.

20. பால் தரும் பசுக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு ..................................... வளமத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

(20×2=40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் இரண்டாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் ஏதாவது நான்கு வினாவினைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01\. i) புவியியற் பாடத்திற்காக தவணை ஒன்றில் ஆசிரியர் உமக்கு வழங்கிய கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

iii) அப்பாட அலகில் அல்லது தேர்ச்சி மட்டத்தில் நீர் திரட்டிய தகவல்கள் 2 தருக. (4 புள்ளிகள்)

iv) கணிப்பீட்டினை மேற்கொண்டபோது நீர் பெற்ற அனுகூலம் இரண்டினைத் தருக. (4 புள்ளிகள்)

02\. சரியான படவரைகலை நுட்பமுறைகளைப் பயன்படுத்தி கீழே 1 தொடக்கம் 5 வரையுள்ள விடயங்களை வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1) தக்கணபீட பூமி
2) கலாகாரிப்பாலைவனம்
3) மிசூரி மிசுசிப்பி
4) அரேபியக்கடல்
5) துல்லபார் சமவெளி
6) மலாக்கா தொடுகடல்

(12 புள்ளிகள்)



kalvi.lk

03. i) வளிமண்டலத்தலுள்ள பிரதான வாயுக்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

ii) வளிமண்டலப்படை அமைப்புக்களை வரைபடத்தில் குறித்துக் காட்டுக. (4 புள்ளிகள்)

iii) ஓசோன் படையின் முக்கியத்துவம் இரண்டினையும் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் 3யும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

04. i) உலகப் புறவுருவப் படத்தில் பாற்பண்ணை உற்பத்தியில் ஈடுபடும் நாடுகள் மூன்றினைக் குறித்துப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii) மேலே நீர் குறிப்பிட்ட நாடுகளில் பாற்பண்ணை உற்பத்திக்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 4 இனைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) பாற்பண்ணை உற்பத்தியின் விசேட பண்புகள் 5 இனைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

05. i) இலங்கையில் தேயிலை செய்கை பண்ணப்படும் மாவட்டங்கள் மூன்றினை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii) தேயிலைப் பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 இனைத் தருக. (4 புள்ளிகள்)

iii) இலங்யையில் தேயிலைப் பயிர்ச்செய்கையினை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கை 3 தருக. (5 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

06. i) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் பிரிவுகள் 3 தருக. (3 புள்ளிகள்)

ii) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் விருத்திக்கு பங்களிப்புச் செய்த காரணிகள் 4 தருக. (4 புள்ளிகள்)

iii) இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் முக்கியம் பெறுவதற்கான காரணிகள் 4 தருக. (5 புள்ளிகள்)

07. i) காலநிலை என்றால் என்ன என்பதனை வரையறை செய்க. (3 புள்ளிகள்)

ii) பூமியில் வெப்பநிலையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட காலநிலை வலயங்களைப் பெயரிட்டு அவற்றை வரைபடத்தில் குறித்துக் காட்டுக. (4 புள்ளிகள்)

iii) நீர் மேலே குறிப்பிட்ட காலநிலை வலயங்களில் ஏதவாது ஒன்றின் முனைப்பான அம்சத்தினை 2 காரணிகளின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk


Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk



kalvi.lk

kalvi.lk



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அடியாபன Kalvi.lk

Whatsapp
075 287 1457